**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 184/மா/2023**

**நாள் : 24/08/2023**

திரு. பொன்.சாமுவேல்,
மிட்டணமல்லி, ஆவடி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
ஆவடி மாநகராட்சி, ஆவடி – எதிர்மனுதாரர்

சென்னை, ஆவடி, மிட்டணமல்லி, வள்ளுவர் தெரு, கதவு எண்.9 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.பொன்.சாமுவேல் என்பவரின் 15.06.2023 நாளிட்ட மனு 19.06.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 184/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை, ஆவடி, மிட்டணமல்லி, வள்ளுவர் தெரு, கதவு எண்.9 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.பொன். சாமுவேல் அவர்கள் தனது 15.06.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

" ஆவடி மாநகராட்சிக்கு சொந்தமான வண்ணான்குளம் மிட்டணமல்லி பகுதியில் உள்ளது. வண்ணான்குளம் 3 ஏக்கர் 26 சென்ட் இதில் 2 ஏக்கர் அளவிற்குதான் பணிகள் நடந்து வருகிறது. குளம் தூர்வாரும் பணியும் நடைமேடை பணிகளும் தரம் இல்லாமல் சிமெண்ட் கலவையை கலந்து பணிகள் நடைபெற்று வருகிறது. A.E ஷோபனாதேவி அவர்கள் பணிகள் நடைபெறும் இடத்திற்கு வருவது கிடையாது. ஒப்பந்ததாரர்களிடம் கமிஷன் வாங்கிக்கொண்டு ஆய்வு மேற்கொள்ளாமல் ஒப்பந்ததாரர்கள் சொல்லும் பணிக்கு மற்றும் M.Bookல் பணிகள் குறிப்பிட்டு அளவு புத்தகத்தில் எழுதி கணக்கு காட்டி வருகிறார். மீதி உள்ள 1.26 ஏக்கர் மாநகராட்சிக்கு சொந்தமான குளம் இருக்கும் இடத்தில் பரத் அவென்யூ ரியல் எஸ்டேட் அதிபர் மற்றும் AE ஷோபனாதேவி இருவரும் சேர்ந்து கொண்டு எந்த

அனுமதியும் வாங்காமல் சிமெண்ட் சாலை அமைத்து நகராட்சியிடம் எந்த அனுமதியும் வாங்காமல் பிளாட் போட்டு, கற்கள் நட்டு விற்பனை செய்ய முயற்சி செய்து வருகின்றனர். மாநகராட்சிக்கு சொந்தமான 1.26 ஏக்கர் குளம் மதிப்பு 5 கோடி ஆகும். அதே பகுதியில் சிதம்பரம் நகர் மனோனி பார்ட்டி ஹால் அனுமதி வாங்காமல் கட்டியுள்ள திருமண மண்டபம் மீது நடவடிக்கை எடுக்காமல் கையூட்டு வாங்கிக்கொண்டு வேடிக்கை பார்த்து வருகின்றனர். மனோனி பார்ட்டி ஹால் மீது Locking and Sealing நோட்டீஸ் வழங்கி சீல் வைக்குமாறு உள்ளாட்சி முறை மன்றத்தை தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன் " என தெரிவித்துள்ளார்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 03.07.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆவடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3. ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது 11.08.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:**

" ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4க்குட்பட்ட மிட்டணமல்லி வண்ணான்குளம் சீரமைப்பு பணிகள், நில அளவை எண்.266, 1.29 ஏக்கர் பரப்பில் குளம் சீரமைப்பு பணிகள் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள திரு கே.சீனுவாசலு ஒப்பந்ததாரர் அவர்களுக்கு 23.11.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

விரிவான திட்ட மதிப்பீட்டில் உள்ளவாறு 1.29 ஏக்கர் பரப்பளவில் குளத்தினை ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல் Stone pitching கற்கள் பதித்தல், நடைபாதைக்கான பக்கவாட்டு (kerb wall) சுவர் அமைத்தல் போன்ற பணிகள் வரை முடிக்கப்பட்டுள்ளது. தற்போது, நடைபாதை அமைத்தல் பணிகள் நடைபெற்று வருகிறது. பணிகள் அனைத்தும் மதிப்பீட்டில் உள்ளவாறு அளவீடுகள்படி தரமான கட்டுமான பொருட்கள் பயன்படுத்தி நல்ல முறையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

மண்டலம்–1 உதவிப்பொறியாளர் அவர்களால் அன்றாடம் வண்ணான்குளம் பணிகள் நடைபெறுவதை கள ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஸ்தலத்தில் நடைபெற்ற பணிக்கு மட்டுமே அளவீடுகள் எடுக்கப்பட்டது. செய்து முடிக்கப்பட்ட பணிக்கான பட்டியல் தொகை ஏதும் இதுநாள் வரை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படவில்லை. நில அளவை பதிவேட்டின்படி, நில அளவை எண்.266 பரப்பளவில் பணிகள் நடைபெற்று வருகிறது. பாப்பான்குளம், வண்ணான்குளம் இரண்டிற்கும் நடுவே அமைக்கப்பட்ட சிமெண்ட் சாலை தற்போது அமைக்கப்படவில்லை. மண்டலம் –1 வார்டு உதவிப்பொறியாளர் அவர்களால் தற்போது இப்பகுதிக்கு Layout அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை.

மனோனி பார்ட்டி ஹால் உரிமையாளரிடம் கட்டிட வரைபட நகல் கோரி 11.07.2023 அன்று அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. இதுநாள்வரை சமர்ப்பிக்கப்படாததால் மேற்சொன்ன மனோனி பார்ட்டி ஹால் பகுதியினை அளவீடு செய்து ஆக்கிரமிப்பு குறித்து அறிக்கை பெறுவதற்கு வட்டாட்சியர், ஆவடி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கையின்படி மனோனி பார்ட்டி ஹால் கட்டிடத்தின் மீது

நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 14.08.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 03.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5. மனுதாரர் 14.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

" ஆவடி மாநகராட்சிக்கு சொந்தமான மிட்டணமல்லி பகுதியில் வண்ணான்குளம் 3 ஏக்கர் 26 செண்ட் இடத்தில் 2 ஏக்கர் அளவிற்கு குளத்தை சீரமைக்கவும், குளத்தை ஆழம் மற்றும் அகலப்படுத்தும் பணிகள் மற்றும் நடைபாதைக்கான பக்கவாட்டு சுவர் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட குளத்தை தூர் வாரும் பணிகள் தரமற்றதாக உள்ளது. மேலும் பக்கவாட்டு சுவர் தரமற்றதாக கட்டப்பட்டுள்ளது. பணிகள் நடைறெும் இடத்திற்கு சம்மந்தப்பட்ட உதவிப்பொறியாளர் வருவதில்லை. மேற்கண்ட குளத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து ஆக்கிரமிப்பாளர்களால் பிளாட் போட்டு விற்பனை செய்ய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதே பகுதியில் சிதம்பரம் நகர் மனோனி பார்ட்டி ஹால் கட்டட அனுமதி இல்லாமல் திருமண மண்டபம் கட்டியுள்ளனர். மேற்கண்ட அனுமதியற்ற கட்டடத்தின் மீதும் ஆவடி மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட வண்ணான்குளம் அமைந்துள்ள இடத்தில் தனியார் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட குளத்தின் முழு இடத்தையும் மீட்டு முறையாக சீரமைக்கவும், தரமான நடைபாதை அமைத்திடவும் மேலும் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள மனோனி பார்ட்டி ஹால் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6. ஆவடி மாநகராட்சியின் உதவிப்பொறியாளர் 14.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்:**

" ஆவடி மாநகராட்சி வார்டு எண்.4 மிட்டணமல்லி வண்ணான்குளத்தை ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், நடைபாதைக்கான பக்கவாட்டு சுவர் அமைத்தல் மற்றும் கற்கள் பதித்தல் போன்ற சீரமைப்புப் பணிகள் 1.29 ஏக்கர் பரப்பளவில், 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது நடைபாதை அமைத்தல் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிகள் ஒப்பந்ததாரரால் தரமாகவே செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகள் செய்தமைக்கான பட்டியல்தொகை இன்னும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படவில்லை.

மனுதாரர் தெரிவித்துள்ள மனோனி பார்ட்டி ஹால் உரிமையாளரிடம் கட்டட வரைபட நகல் மற்றும் தொடர்பான ஆவணங்களை மாநகராட்சியில் அளித்திட 11.07.2023 அன்று அறிவிப்புக்கடிதம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது வரை மேற்கண்ட கட்டடம் தொடர்பான வரைபட நகலை உரிமையாளர் அளிக்கவில்லை என்பதையும், மேற்கண்ட மனோனி பார்ட்டி ஹால் பகுதியினை அளவீடு செய்தும், அங்கு ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்தும் அறிக்கை வேண்டி ஆவடி வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது

என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட பார்ட்டி ஹால் மீது சட்டப்படி Lock and Seal தாக்கீது இன்னும் ஒரு மாத காலத்தில் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஆவடி மாநகராட்சி ஆணையரின் 11.08.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம், ஆவடி மாநகராட்சி உதவிப்பொறியாளரின் வாக்குமூலம், ஆணையரின் அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர், ஆவடி மாநகராட்சிக்கு சொந்தமான மிட்டணமல்லி பகுதியில், வண்ணான்குளம் 3 ஏக்கர் 26 செண்ட் இடத்தில் 2 ஏக்கர் அளவிற்கு குளத்தை சீரமைக்கவும், குளத்தை ஆழம் மற்றும் அகலப்படுத்தும் பணிகள் மற்றும் நடைபாதைக்கான பக்கவாட்டு சுவர் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட குளத்தை தூர் வாரும் பணிகள் தரமற்றதாக உள்ளது. மேலும் பக்கவாட்டு சுவர் தரமற்றதாக கட்டப்பட்டுள்ளது. பணிகள் நடைபெறும் இடத்திற்கு சம்பந்தப்பட்ட உதவிப்பொறியாளர் வருவதில்லை. மேற்கண்ட குளத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து ஆக்கிரமிப்பாளர்கள் பிளாட் போட்டு விற்பனை செய்ய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதே பகுதியில் சிதம்பரம் நகர் மனோனி பார்ட்டி ஹால் கட்டட அனுமதி இல்லாமல் திருமண மண்டபம் கட்டியுள்ளனர். மேற்கண்ட அனுமதியற்ற கட்டத்தின் மீதும் ஆவடி மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட வண்ணான்குளம் அமைந்துள்ள இடத்தில் தனியார் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட குளத்தின் முழு இடத்தையும் மீட்டு முறையாக சீரமைக்கவும், தரமான நடைபாதை அமைத்திடவும் மேலும் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள மனோனி பார்ட்டி ஹால் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

ஆவடி மாநகராட்சி உதவிப்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் மேற்கண்ட வண்ணான்குளத்தை ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், நடைபாதைக்கான பக்கவாட்டு சுவர் அமைத்தல் மற்றும் கற்கள் பதித்தல் போன்ற சீரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டு நடைபாதை அமைத்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள பார்ட்டி ஹால் மீது சட்டப்படி Lock and seal தாக்கீது ஒரு மாதகாலத்தில் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

அரசு நிலங்கள் குறைவாக உள்ளன. தகுதி வாய்ந்த ஏழைகளுக்கு அரசு புறம்போக்கு நிலங்களை ஒப்படைப்பு செய்தல் மூலமும், இதர வளர்ச்சி திட்டங்களுக்காகவும் மற்றும் பொது நோக்கங்களுக்காகவும் அளிப்பதன் மூலம் அரசு நிலம் நன்கு பயன்பட வேண்டும் என்பதால் அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு தடுக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். மாநகராட்சி பகுதிக்குட்பட்ட இடங்களில் உள்ள நீரோட்டங்கள் மற்றும் குளம், குட்டைகள் கால்நடைகளுக்கு மட்டுமின்றி பொதுமக்களுக்கும் பயன்படுகின்றன. சில இடங்களில் மேற்கண்ட குளம், குட்டைகள் குடிநீருக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. எனவே

நீரோட்டங்களையும் குளங்களையும் மற்றும் குட்டைகளையும் பாதுகாத்து பராமரிக்க வேண்டியது அந்தந்த மாநகராட்சியின் கடமையாகும்.

மனுதாரர் 24.02.2023 அன்று இப்பொருள் தொடர்பாக பல்வேறு அரசு அலுவலகங்களுக்கு மனு அனுப்பியும் அதன் நகலினை ஆவடி மாநகராட்சிக்கும் அனுப்பியுள்ளார். அதன் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன் பின்னர் இம்முறைமன்ற நடுவத்திற்கு மனு அனுப்பிய பின்னரே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

7( c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், மற்றும்

பிரிவு 12. (1 ) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely :-

( c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body அடிப்படையிலும் இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மேற்கண்ட வண்ணான்குளம் அமைந்துள்ள இடத்தில் உள்ள தனியார் நடைபாதை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் மேற்கண்ட குளத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்து ஆக்கிரமிப்பாளர்கள் பிளாட் போட்டு விற்பது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் மாநகராட்சி அலுவலர்களால் இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்கப்படவில்லை. மக்கள் பயன்படுத்தும் வகையில் நடைபாதை பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

மேலும் மேற்கண்ட மனோனி பார்ட்டி ஹால் பகுதியினை அளவீடு செய்தும் அங்கு ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்தும் ஆவடி வட்டாட்சியரிடமிருந்து விரைவாக அறிக்கை பெற்று அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட பார்ட்டி ஹால் மீது சட்டப்படி Lock and Seal தாக்கீது இன்னும் 1 மாத காலத்தில் வழங்கப்படும் என்ற ஆவடி மாநகராட்சி உதவிப்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் உரிய நேரத்தில் விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக இருந்த சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறும் நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. பொன்.சாமுவேல்,
   எண்.9, வள்ளுவர் தெரு,
   மிட்டணமல்லி,
   ஆவடி,
   சென்னை – 600 055.

2. ஆணையர்,
   ஆவடி மாநகராட்சி.
   ஆவடி.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

4. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சென்னை–600 032

செயலாளர்
25.8.23